சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:–28.10.2021

## சாதாரணக்கூட்டம்

திருவள்ளுவர் ஆண்டு, பிலவ வருடம் ஐப்பசி மாதம் 11–ஆம் நாள் (அக்டோபர் திங்கள் 28–ஆம் நாள்:–28.10.2021) வியாழன் கிழமையன்று காலை 11.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.1**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் டெங்கு நோய் தடுப்பு பணியில் ஈடுபடும் களப்பணியாளர்கள் (DBC) மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிர்ணயிக்கும் தினக்கூலி அடிப்படையில் ஊதியம் நிர்ணயம் செய்து ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம் பணி மேற்கொண்ட வகையில் மேற்கண்ட பணியின் ஒப்பந்தக்காலம் (10 மாதங்கள்) 05.11.2021–ஆம் தேதியுடன் முடிவடைவதால் பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் மற்றும் கொரோனா தொற்று பரவாமல் தடுக்கவும், மேலும் கோவிட் –19 தடுப்பூசி தொடர்பான கணக்கெடுப்பு பணி மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும் மேற்கண்ட பணியினை ஏற்கனவே ஒப்பந்த பணி மேற்கொண்ட திரு.ஆர்.பரமானந்தன் ஒப்பந்தக்காரர் அவர்களின் மூலமாக மேலும் இரண்டு மாதங்கள் பழைய ஒப்பந்த விகிதத்தில் மேற்படி பணியினை நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட ஒப்பந்த பணியினை இரண்டு மாதம் நீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **384, நாள்.28.10.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.2**

இந்நகராட்சியின் குடிநீர் விநியோகப் பணியில் போதிய பணியாளர்கள் இல்லாததால் Head works, Filter Bed, Tank Operator and Leak பணிகள் போன்றவற்றை கவனிக்க ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்வதற்கு நகர்மன்ற தீர்மான எண்.383, நாள்.11.10.2021 அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியை செய்வதற்கு 27.10.2021ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு, மன்றத்த்ன் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விவரம் | விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி | 0.019% மதிப்பீட்டைவிட குறைவு |
| 2. | திரு.கே.வனராஜ், சின்னமனூர் | 1.32% மதிப்பீட்டைவிட அதிகம் |

அலுவலகக் குறிப்பு:– **1.மேற்காணும் விவரப்படி வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதம் 0.019% குறைவாக இருப்பதால் மேற்படி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1450/2012/இ2)**

**தீர்மான எண், நாள்** **385, நாள்.28.10.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.3**

இந்நகராட்சியின் சொந்தமான தலைமை நீரேற்று நிலையம், குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் குடிநீர் விநியோகம் செய்யும் மினி பவர் பம்ப் மோட்டார்களின் அவ்வப்பொழுது ஏற்படும் பழுதுகளை சரி செய்யும் பணிக்கு நகர்மன்றத் தீர்மான எண்.281, நாள்.31.05.2021ம் தேதி அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணியை செய்வதற்கு 08.10.2021ம் தேதி விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு, மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் | தொகை |
|---|---|---|
| **1. இந்நகராட்சிக்குச் சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள புதிய நீரேற்று நிலையத்தில் இயங்கி வரும் 75HP மோட்டார் பழுதினை சரி செய்யும்** | | |
| 1. | திரு.கே.வனராஜ், சின்னமனூர் | ரூ.17600/– |
| 2. | திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி | ரூ.17950/– |
| **2. இந்நகராட்சிக்குட்பட்டுள்ள மினி பவர் பம்பில் இயங்கி வரும் மோட்டார் பழுது மற்றும் வைண்டிங் பணி மற்றும் நுண் உரம் தயாரிக்கும் மையத்தில் உள்ள Palvizer பழுதினை சரி செய்யும் பணி** | | |
| 1. | திரு.கே.வனராஜ், சின்னமனூர் | ரூ.20400/– |
| 2. | திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி | ரூ.21000/– |
| **3. இந்நகராட்சிக்குச் சொந்தமான குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள 30HP மோட்டார், Clarifier, Butterply Valve and Gate Valve பழுதினை சரி செய்யும் பணி** | | |
| 1. | திரு.கே.வனராஜ், சின்னமனூர் | ரூ.63450/– |
| 2. | திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி | ரூ.64705/– |

**அலுவலகக் குறிப்பு:–** **வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1–இல்காணும் திரு.கே.வனராஜ், சின்னமனூர் அவர்களின் விலைப்புள்ளியின் தொகை குறைவாக இருப்பதால், திரு.கே.வனராஜ், ஒப்பந்தக்காரர், சின்னமனூர் அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்..(ந.க.எண்.1303/2021/இ2)**

**தீர்மான எண், நாள்** **386, நாள்.28.10.2021**

**தீர்மானம்**

*******

## பொருள் எண்.4

கொரோனா பெருந்தொற்றினை பரவாமல் தடுக்கும் நடவடிக்கையாக தமிழக அரசால் 12.09.2021 முதல் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் சிறப்பு மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி முகாம் சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இடங்களில் நடைபெற்று வருகிறது. மேற்படி முகாமிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அலுவலக ந.க.எண்.5437/2021/ஜே2, நாள்.11.09.2021 செய்முறை உத்திரவில் முகாம் நடைபெறும் ஒவ்வொரு இடத்திற்கும் ரூ.500/– ஒதுக்கீடு செய்து உத்திரவிடப்பட்டுள்ளது. மேலும் பொது மக்களிடம் கொரோனா தடுப்பூசி முகாம் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக விழிப்புணர்வு பதாகைகள் (Flex Board) விழப்புணர்வு நிகழ்வுகள் மற்றும் ஆட்டோ ஒலி பெருக்கி விளம்பரம் மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அறிவுறுத்தியதை தொடர்ந்து மேற்படி செயல்பாடுகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– **1.மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்படி கொரோனா தடுப்பு பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டு தொகை வழங்குவதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.3853/2021/எச்1)**

**தீர்மான எண், நாள்** **387, நாள்.28.10.2021**
**தீர்மானம்**

*******

## பொருள் எண்.5

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் கொரோனா தொற்றிலிருந்து பொது மக்களை பாதுகாக்க தேவையான கிருமி நாசினி (Lysol) லைசால் 1000 லிட்டர் விநியோகிக்கும் பணிக்கு 20.10.2021ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட விவரப்படியான விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விவரம் | தொகை ரூ.பை |
|---|---|---|
| 1. | **M/s ஸ்ரீ தாய் மூகாம்பிகை எக்ஸ்போர்ட், கோயம்புத்தூர்** | **ரூ.320/– (18% GST நீங்கலாக)** |
| 2. | **M/s ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங், திண்டுக்கல்** | **ரூ.280/– (18% GST நீங்கலாக)** |

அலுவலகக் குறிப்பு:– **1.குறைவான விலைப்புள்ளி அளித்த M/s ஸ்ரீபாலாஜி மார்க்கெட்டிங், திண்டுக்கல் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.**
**2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும், தொகை வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.3730/2021/எச்1)**

**தீர்மான எண், நாள்** **388, நாள்.28.10.2021**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.6**

சின்னமனூர் நகராட்சிக்கு அரசாணை (டி) எண்.40, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC-2), நாள்.05.02.2021–இல் 2020–2021 ஆம் ஆண்டிற்கான உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டு பணிகளான 1 குடிநீர் விநியோகப் பணிகள் ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டிலும், மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் கட்டும் 1 பணி ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டிலும், தெருவிளக்கு 1 பணி ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டிலும், 1 எண்ணம் 10 கேவிஏ மின் ஆக்கி வாங்கும் பணி ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டிலும் ஆக மொத்தம் 4 பணிகள் ரூ.313.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டன. அதில் குடிநீர் விநியோகப் பணிகள் ரூ.200.00 இலட்ச மதிப்பீட்டிலான பணிகள் மேற்கொள்ள 12.10.2021ம் நாள் வரப்பெற்ற மூன்றாவது மறு ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>இந்நகராட்சிக்குட்பட்ட சிவசக்தி நகர், மின்னகர், அண்ணாமலை நகர் ஆகிய பகுதிகளில் தலா 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கும் பணி மற்றும் விரிவாக்கப் பகுதிகளில் பிரதானக் குழாய்கள் மற்றும் பகிர்மானக் குழாய்கள் அமைக்கும் பணிகள் – ரூ.200.00 இலட்சம்</u>**

1. திரு.RML.கருணாநிதி, காளையார்கோவில் – 4.98% மதிப்பீட்டு விலையைவிட கூடுதல்
2. திரு.RC.ரவிச்சந்திரன், புதுக்கோட்டை – 7.85% மதிப்பீட்டு விலையைவிட கூடுதல்

மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதலாக வரப்பெற்றுள்ளதில், காளையார்கோவில் திரு.RML.கருணாநிதி என்பவரின் 4.98% சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதலாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதால், மேற்படி ஒப்பந்தக்காரரிடம் பேரப்பேச்சு அடிப்படையில் கடிதம் வழங்கக்கோரி, (Negotiation Letter) 22.10.2021–இல் கோரியதில், ஒப்பந்தக்காரர் திரு.RML.கருணாநிதி என்பவர் மூலதன உபகரணங்கள் விலை உயர்வு மற்றும் தொழிலாளர்கள் கூலி உயர்வு காரணமாக ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீடு விலையை விட 4.98% கூடுதலாக குறிப்பிடப்பட்டுள்ளதை குறைக்க இயலாது எனத் தெரிவித்துள்ளதால், 2000ம் ஆண்டிற்கான உள்ளாட்சி அமைப்பிற்கான நகராட்சி பொறியியல் நடைமுறை நூல் இயல்–II (Chapter-II) விதி எண்.2.7.2–இல் முதல் அழைப்பிலேயே மதிப்பீடு விலை விகிதத்திற்கு 5 சதவிகிதத்திற்குள் கூடுதல் தொகையினை ஒப்புதல் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1.மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம் அல்லது விதியின்படி 5%-க்கு குறைவாக உள்ளதால் ஒப்புதல் செய்யலாம். (ந.க.எண்.2380/2018/இ1).**
**2. கூடுதலான செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம்.**

**தீர்மான எண், நாள்** **389, நாள்.28.10.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.7**

இந்நகராட்சிக்குச் சொந்தமான பழைய சப்–ரிஜிஸ்டர் ஆபீஸ் தெருவில் அமைந்துள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளியில் மாணவர்களின் கல்வி தரத்தினை உயர்த்தும் பொருட்டு Smart Class Room அமைக்கும் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.**9.90** இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | **1. மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.**<br>**2. மேற்படி செலவினத்தை கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4239/2021/இ1)** |
| **தீர்மான எண், நாள்** | **390, நாள்.28.10.2021** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.8**

இந்நகராட்சிக்குச் சொந்தமான பழைய சப்–ரிஜிஸ்டர் ஆபீஸ் தெருவில் அமைந்துள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளியில் மாணவர்களின் கல்வி தரத்தினை உயர்த்தும் பொருட்டு Smart Class Room அமைப்பதற்கு கூடுதல் உட்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.**6.80** இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | **1. மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.**<br>**2. மேற்படி செலவினத்தை கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4239/2021/இ1)** |
| **தீர்மான எண், நாள்** | **391, நாள்.28.10.2021** |
| **தீர்மானம்** | |

*******